தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பயன்படுத்திக் கொள்வோம்!

உணவுப் பாதுகாப்பு கருதி, வணிக இயைபு ஒப்பந்தத்தில் (டி.எப்.ஏ.) கையெழுத்திட மறுத்த இந்தியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா தோள் கொடுத்திருப்பதும், இந்தியாவின் "பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வரை' நிபந்தனையில் விலக்கு அளிக்கலாம் என்கிற உலக வர்த்தக நிறுவன ஷரத்தை இந்தியா பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பது என்ற முடிவும், இந்தியாவுக்கு கிடைத்திருக்கும் வெற்றி என்பதில் சந்தேகமில்லை. வேளாண்மைக்கு வழங்கப்படும் மானியம், மொத்த உற்பத்தி மதிப்பில் 10 விழுக்காடுக்கு மிகக் கூடாது என்கிற ஒரே நிபந்தனைதான் இந்தியாவுக்கு இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தடையாக இருந்தது. இப்போது பிரச்னை நிரந்தரமாகத் தீர்வு காணப்படும் வரை விலக்கு அளிப்பதற்கு அமெரிக்காவே ஆதரவு தெரிவிக்க முன்வந்திருப்பதால், உலக வர்த்தக நிறுவனமும் (டபிள்யு.டி.ஓ.) அதை அங்கீகரிக்கும். இந்திய அரசு, தற்போது வேளாண்மைக்கு ஒதுக்கீடு செய்யும் மானியம் ரூ.1.15 லட்சம் கோடி. இது, மொத்த வேளாண் உற்பத்தி மதிப்பில் 10 விழுக்காடாக இல்லை. இந்த மானியத்திலும் 80 விழுக்காடு உர மானியமாக உர ஆலைகளுக்கும், இலவச மின்சாரத்துக்கு ஈட்டுத்தொகையாகவும் போய்விடுகின்றன. விவசாயிக்கு நேரடி மானியமாகக் கிடைப்பது குறைவு. இந்த மானியத்தையும் வேறுவிதத்தில் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே அரசு தொடங்கிவிட்டது. அதாவது, ஒவ்வொரு மாநிலத்துக்கும் இந்திய உணவுக் கழகம் (எப்.சி.ஐ.) எவ்வளவு கொள்முதல் செய்யுமோ அதற்கு மட்டுமே மத்திய அரசு ஆதரவு விலை தரும் என்ற கட்டுப்பாடு

வந்துவிட்டது. இதுபோன்று பல வகைகளிலும் கடிவாளம் போடப்படும். நிச்சயமாக, இந்த 10 விழுக்காடு மானிய அளவை இந்தியா தாண்டப் போவதில்லை. இப்போது வணிக இயைபு ஒப்பந்தத்தில் (டி.எப்.ஏ.) இந்தியா கையெழுத்திட்டாக வேண்டிய பொறுப்பை, சில உறுதிமொழிகள் கூறி, சில நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொண்டாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 60 கோடி மக்களுக்கு மிகக் குறைந்த விலையில் அரிசி, கோதுமையை பொது விநியோகத் திட்டத்தில் கொண்டு சேர்க்க ரூ.1.25 லட்சம் கோடி மானியத்தை இந்தியா ஒதுக்கீடு செய்கிறது. வணிக இயைபு ஒப்பந்தம் வலியுறுத்தும் 10 விழுக்காடு மானிய நிபந்தனை, உணவுப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பொது விநியோகத்தில் அளிக்கப்படவுள்ள குறைந்த விலை அரிசி, கோதுமை, பருப்பு ஆகியவற்றை தடை செய்வதாக ஆகிவிடக் கூடாது என்பதைத் தெளிவுபடுத்தவே இதுவரையிலான இந்தியாவின் எதிர்ப்புக்குக் காரணம். இது அரசியல் என்பதும் வாக்கு வங்கிக்காக இதை இந்தியா செய்தாக வேண்டிய கட்டாயம் உள்ளது என்பதும்கூட உலக வர்த்தக நிறுவனத்துக்கு நன்றாகத் தெரியும். இப்போது 10 விழுக்காடு நிபந்தனைக்கு விலக்கு அளிக்கும்போது, உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மானியத்தில் கொள்முதல் செய்யப்படும் உணவுப்பொருள் பொதுச் சந்தைக்கு வராது என இந்தியா உறுதி கூற வேண்டியிருக்கும். ஏழைகள் எத்தனை பேர், அவர்களுக்கு எவ்வளவு உணவுப்பொருள் தேவை, கூடுதலாக எந்த அளவு இருப்பு வைக்கலாம் போன்றவற்றை இந்தியா தெரிவித்த பிறகுதான் வணிக இயைபு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அனுமதிப்பார்கள். அதில் தவறு ஒன்றுமில்லை. இந்தியாவைப் பொருத்தவரை பொது விநியோகத்தில் அரிசியை இலவசமாகவே கொடுத்தாலும், சந்தையில் பொன்னி அரிசி கிலோ ரூ.50 கொடுத்து வாங்குகிறவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடக்கூடாது என்பதில் அவர்கள் கருத்தாக இருப்பார்கள்.

அதேபோலத்தான் கோதுமையிலும். இந்தியாவின் வேளாண்மைக் கொள்கை, மானியங்கள் மூலம் விவசாயிகளைப் பாதுகாப்பது போலத் தோன்றினாலும், உண்மையில் நிலைமை அதுவல்ல. அப்படி இருந்தால் விவசாயிகள் தற்கொலை தொடர்வதும், விவசாயத்தைக் கைவிடுவதும் இருக்காது. மானியங்கள் உர நிறுவனங்களைக் கொழிக்கச் செய்கின்றன அவ்வளவே. அதேபோல, இத்தனை ஆண்டுகளாகியும் பொது விநியோக அமைப்பு, முறையாகச் செயல்படாமல் இருக்கிறது. போலி குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. பொது விநியோகத்திற்கென ஒதுக்கப்படும் உணவுப் பொருள்கள் சந்தையின் விற்பனைப் பொருள்களாவது தொடர்கிறது. முறைகேடில்லாத பொது விநியோகத்திற்கு வழிகோல வேண்டும். பாசன வசதி, சந்தைக் கட்டமைப்பு, மேம்படுத்தப்பட்ட விதைகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு உறுதி செய்து, விவசாயம் செழிக்க வழிகோல வேண்டும். இவற்றை உறுதிப்படுத்தினால், வணிக இயைபு ஒப்பந்தத்தின் நிபந்தனையான 10 விழுக்காடே சாத்தியம்தான்!

## <u>விதை நெல் உற்பத்தி குறித்த பயிற்சி முகாம்</u>

திருவள்ளூரை அடுத்த திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில், தரமான விதை நெல் உற்பத்தி செய்வது குறித்த புத்தாக்கப் பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது. இந்தப் பயிற்சி முகாமுக்கு வேளாண்துறை இணை இயக்குநர் சுந்தரராஜன் தலைமை வகித்தார். துணை இயக்குநர்கள் பாபு, முபாரக்பாஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் விதைப்பு அறிக்கை பதிவு, ஆய்வு நாள்கள் நிர்ணயித்தல், வயல் ஆய்வுப் பணி, விதைக் குவியல் ஆய்வுப் பணி ஆகிய நடைமுறைகள் குறித்து விதைச் சான்று அலுவலர் செண்பகவள்ளி விளக்கிக் கூறினார். தரமான விதை உற்பத்தி செய்வதற்கான தொழில் நுட்பங்கள் குறித்து விதைச் சான்று உதவி

இயக்குநர் பிரதீப் குமார் விளக்கினார். திறனாய்வுப் பணி, தள்ளுபடிக்கான காரணங்கள் குறித்து உதவி இயக்குநர் ஸ்ரீதேவி, விதைப் பரிசோதனை நடைமுறைகள் குறித்து உதவி இயக்குநர் ஞானசேகரன் ஆகியோர் எடுத்துரைத்தனர். இதைத் தொடர்ந்து விதை உற்பத்தியாளர் பயிற்சி கையேட்டை இணை இயக்குநர் சுந்தரராஜன் வெளியிட, அதை துணை இயக்குநர்கள் பாபு, சுரேஷ், முபாரக் பாஷா ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இதில் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண் உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், துணை அலுவலர்கள், உதவி விதை அலுவலர்கள் பங்கேற்றனர். விதைச் சான்று அலுவலர் திருமலைவடிவு நன்றி கூறினார்.

## <u>நடப்பாண்டில் 110 புதிய பண்ணைக் குட்டைகள் அமைப்பு: வேளாண்மை இணை இயக்குநர் தகவல்</u>

ராமநாதபுரம் மாவட்டத்தில் நீர்வளத்தை மேம்படுத்தும் வகையில் நடப்பு ஆண்டில் 110 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டிருப்பதாக வேளாண்மை இணை இயக்குநர் நா.வீ. கிருஷ்ணமூர்த்தி சனிக்கிழமை தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறியது..

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆட்சியரை தலைவராகக் கொண்டு மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் மாவட்டத்தில் 6 வட்டாரங்களில் நீர்வளத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் மட்டும் 110 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. 296 ஊருணிகள், 64 கண்மாய்கள், 93 வரத்துக்கால்வாய்கள் தூர்வாரப் பட்டிருக்கின்றன. தற்போது பெய்த மழையால் இவையனைத்தும் நிரம்பி விவசாயத்துக்கும், மக்களின் பயன்பாட்டுக்கும் தயாராக உள்ளது. இத்தகைய மழைநீர் அறுவடை கட்டமைப்புகளின் மூலம் மழைநீர்

சேமிக்கப்படுவதோடு நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து அருகில் உள்ள கிணறுகளிலும் நீரின் உப்புத் தன்மை குறைந்து நீரின் தரம் மேம்பட்டிருக்கிறது. மைக்கேல்பட்டினத்தில் தூர்வாரப்பட்ட படித்துறையையும் நீர்வரத்துக் குழாய் அமைக்கப்பட்டுள்ள பள்ளிக்கூட ஊருணியையும் ஆட்சியர் நேரில் ஆய்வு செய்தார். அந்த ஊருணி தற்போது சீரமைக்கப்பட்டிருப்பதால் நீர்ப்பிடிப்புத் திறன் அதிகரித்து கிராம மக்களின் பயன்பாட்டுக்கு மிகவும் பயனுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**<u>இயற்கை வேளாண்மையே மண்வளம் காக்கும்</u>**

இயற்கை வேளாண் முறையே மண் வளத்தைப் பாதுகாக்கும் என, வேளாண் அறிஞர் பாமயன் வலியுறுத்தியுள்ளார். தமிழக தொழில்நுட்பக் கழகம் மற்றும் நாணல் நண்பர்கள் அமைப்பு ஆகியன சார்பில், காந்தி அருங்காட்சியகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது: நீர் மேலாண்மையில் தமிழர்கள் சிறந்து விளங்கியுள்ளனர். ஓடும் தண்ணீரில் அணை கட்டிய தொழில்நுட்பம் தமிழர்களுக்கே உரியதாக இருந்தது. இந்த முறையில்தான் கல்லணை கட்டப்பட்டது. மழைநீர் சேகரிப்பிலும் சிறந்த தொழில்நுட்பத்தைக் கடைபிடித்துள்ளனர். ஆற்றின் குறுக்கே அணைகளைக் கட்டி தேக்கி வைத்து, கால்வாய்கள் மூலம் கடை மடைக்கு முதலில் தண்ணீரை செலுத்தி, ஏரிகளை நிரப்பி வைத்துள்ளனர். இயற்கையான முறையில் விவசாயம் செய்து வந்துள்ளனர். ஆனால், ஆங்கிலேயர்கள் காலத்தில் வேளாண் முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

யூரியா போன்ற ரசாயன உரங்களையும், பூச்சிக் கொல்லிகளையும் பயன்படுத்தினர். இயற்கை வேளாண் முறையில் செடிகளுக்கு அதிக நீர் தேவை ஏற்படவில்லை. மாறாக, ரசாயன உரப் பயன்பாடு தண்ணீரின் தேவையை அதிகரித்துவிட்டது. இதனால், மோட்டார் இயந்திரம் வைத்து நீர் இறைக்கவேண்டிய நிலைக்கு ஏற்பட்டது. இதன் விளைவால், 90 சதவீத விவசாயிகள் தண்ணீர் கிடைக்காமல் விவசாயத்தை கைவிடவேண்டிய

நிலைக்குத் தள்ளப்பட்டனர். இது மட்டுமின்றி, ரசாயன உரம் பயன்படுத்தினால் அதிக பூச்சிகள் உருவானது. அவற்றைக் கட்டுப்படுத்த பூச்சிக் கொல்லி மருந்துகளின் வீரியமும் அதிகரிக்கப்பட்டது. பூச்சிகளின் எதிர்ப்பு சக்தி அதிகரித்துக் கொண்டே வந்ததால், செடிகளை ஊடுருவும் பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தும் நிலை தற்போது இருந்து வருகிறது. மேலும், வீரிய விதைகள் என்ற பெயரில் பாரம்பரிய விதைகள் ஒழிக்கப்படுகின்றன. மண்ணில் உள்ள பாக்டீரியாக்களும், மண்புழுக்களும் விவசாயிகளுக்கு நன்மை தருகின்றன. இவற்றை, ரசாயன உரங்கள் அழித்துவிடுவதால், மண் இறுகிக் கொண்டே வருகிறது. இதில் உள்ள சூழ்ச்சியை விவசாயிகள் புரிந்து கொள்ளவேண்டும். மரபு சார்ந்த வேளாண்மையில் உள்ள குறைபாடுகளை நீக்கி, இயற்கையான நவீன வேளாண் முறையை கடைபிடித்தால் மட்டுமே மண் வளத்தைப் பாதுகாக்க முடியும் என்றார்.

## <u>நெல் பயிர்களைத் தூர் அழுகல் நோய் தாக்கும் அபாயம்: வேளாண் துறை</u>

நெல் பயிர்களில் தூர் அழுகல் நோய்த் தாக்கும் அபாயம் இருப்பதாக வேளாண் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈரோடு மாவட்டம், கோபி பகுதியில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில் இரண்டாம் போக நெல் சாகுபடிக்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதையடுத்து, கோபி மற்றும் தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரங்களில் 5,600 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்ய வாய்ப்பு உள்ளதாக வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர். தற்போதை சம்பா பருவத்திற்கு நடுத்தர வயது உள்ள ரகங்களாக கோ-50, கோ-51 ஆகிய ரகங்கள் ஏற்றவை என தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் சிபாரிசு செய்துள்ளதால் அந்த ரகங்களை விவசாயிகள் பயிர் செய்யலாம். குறிப்பாக ஏடீடி-38 நெல் ரகத்தில் தூர் அழுகல் நோய்த் தாக்க வாய்ப்பு அதிகம் உள்ளதால் விதை நேர்த்தி செய்யாமல் விதைக்கக் கூடாது என்று வேளாண் துறையினர்

விவசாயிகளை எச்சரித்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில், கீழ்பவானி பாசனப் பகுதிகளில் ஏற்கெனவே ஏடீடி 38 ரக நெல் பயிரிடப்பட்டு கதிர் பிடிக்காமல் இருப்பதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மகளிர் விவசாய கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு ரூ. 4.61 லட்சம் கடனுதவி**

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகேயுள்ள கொத்தமங்கலத்தில் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலம் விவசாய கூட்டு பொறுப்புக் குழுக்களுக்கு வட்டியில்லா கடனாக ரூ. 4.61 லட்சம் சனிக்கிழமை வழங்கப்பட்டது. கொத்தமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 4 மகளிர் விவசாய கூட்டுப் பொறுப்புக்குழுவைச் சேர்ந்த 40 பெண்களுக்கு வட்டியில்லா கடனாக மொத்தம் ரூ. 4.61 லட்சம் ரொக்கத்தை கூட்டுறவு சங்கத் தலைவர் சேகர் வழங்கினார். இதில் சங்கத் துணைத் தலைவர் ராமநாதன், இயக்குநர்கள் பாலகிருஷ்ணன், ஆனந்தன், லோகநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ஆய்வு**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை மற்றும் வி.ஆர்.எஸ்.எஸ்.புரம் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உள்ள உரம் இருப்பு குறித்து கூடுதல் பதிவாளர் ஆர். பிருந்தா ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வேப்பந்தட்டை மற்றும் வி.ஆர்.எஸ்.எஸ்.புரம் ஆகிய தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உரம் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்ட அவர், விவசாயி களுக்கு தேவையான உரங்கள் சீராகக் கிடைத்திட ஏதுவாக போதிய அளவு யூரியா தொடக்க வேளாண் கடன் சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இருப்பு வைக்க அறிவுரை வழங்கி, விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரங்களின் அளவு, இருப்பின் அளவுகளை பார்வையிட்டு, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் களுக்கான உர

விநியோகத்தையும் கேட்டறிந்தார். மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சிவ. முத்துக்குமாரசாமி, துணைப்பதிவாளர் ராஜாசாமிநாதன், சங்கத் தலைவர் கே. வேலாயுதம், செயலர் நடராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

**<u>உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 10 ஆயிரம் பேர் பயன்: அமைச்சர்</u>**

தூத்துக்குடி மாவட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர் என்றார் சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன். தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளாக சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன் கலந்துகொண்டு 745 பேருக்கு திருமணம், கல்வி, விபத்து இறப்பு போன்ற திட்டத்தின் கீழ் ரூ. 32 லட்சம் அளவில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தொடர்ந்து அவர் பேசுகையில், தமிழகத்தில் உழவர் பெருமக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர். மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை அரசு கொண்டு வந்துள்ளது. அரசின் நலத்திட்ட உதவிகளை பெறுகிற மக்கள் என்றும் அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார். நிகழ்ச்சியில், கோவில்பட்டி சார்- ஆட்சியர் டாக்டர் விஜயகார்த்திக்கேயன், மக்களவை உறுப்பினர் ஜெ.ஜெயசிங் தியாகராஜ் நட்டர்ஜி, விளாத்திக்குளம் சட்டப்பேரவை உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மாநகராட்சி மேயர் ஏபிஆர். அந்தோணிகிரேஸ்,

மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மோகன், ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் காந்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் பாலசுப்பிர மணியம், தனித்துணை ஆட்சியர் கமலம், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் காளிமுத்து உள்பட பலர் கலந்துகொண்டனர். புதிய கட்டடம் திறப்பு: தொடர்ந்து, ஓட்டப்பிடாரம் வஉசி அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.16 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட வகுப்பறைகளை சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன் திறந்து வைத்தார். விழாவில், அவர் பேசுகையில், கடந்த மூன்றாண்டுகளில் பிளஸ் 2 பயின்ற 16 லட்சத்து 16 ஆயிரம் மாணவர், மாணவிகளுக்கு ரூ.1637.78 கோடி செலவில் மடிக்கணினிகளும், 18 லட்சத்து 83 ஆயிரம் பேருக்கு ரூ.577.39 கோடி செலவில் மிதிவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

**ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

அரூர் அருகேயுள்ள க.ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீரை உயர் கல்வித் துறை அமைச்சர் பி. பழனியப்பன் திறந்து வைத்தார். தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கம்பைநல்லூர் அருகே தென்பெண்ணையாற்றின் குறுக்கே க.ஈச்சம்பாடி அணைக்கட்டு உள்ளது. இந்த அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், க.ஈச்சம்பாடி அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டார். இதன்படி, அணையில் இருந்து தண்ணீர் திறப்பு விழா தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில், தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் பங்கேற்று, அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்தார். இந்த அணையின் கால்வாய்கள் மூலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள ஆயக்கட்டு பகுதிகளில்

6,250 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதியைப் பெறுகின்றன. இடது, வலதுபுறக் கால்வாய் வழியாகப் பாசனத்துக்கு செல்லும் தண்ணீரால் தருமபுரி மாவட்டத்தில் அக்ராஹரம், ஈச்சம்பாடி, கெட்டுப்பட்டி, சாமண்டஹள்ளி, எலவடை, பாளையம், பள்ளிப்பட்டி, காட்டானூர், வெள்ளாம்பட்டி, சிங்கிரிப்பட்டி ஆகிய 10 கிராமங்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரியகுட்டக்குளம், சொரக்காப்பட்டி, மேட்டுத்தாங்கல், கொல்லப்பட்டி, வேடப்பட்டி, செங்கல்பட்டி உள்பட 21 கிராமங்களில் உள்ள விளைநிலங்களும் பயன்பெறும் வகையில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த அணையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (நவ.16) முதல் 120 நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இடது, வலது புற கால்வாய்களில் ஒவ்வொரு கால்வாயிலும் 2 மண்டலங்களாகப் பிரித்து, முதல் மண்டலத்திற்கு 5 நாள், 2-ஆவது மண்டலத்துக்கு 5 நாள் என முறைவைத்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த அணையில் இருந்து நொடிக்கு 70 கனஅடி வீதம், 4 மாதங்களுக்கு தண்ணீர் திறக்கப்படும். தென்பெண்ணையாற்றில் நீர் வரத்து அதிகரித்தால், கூடுதலாகத் தண்ணீர் திறந்துவிடப்படும் நாள்கள் நீட்டிப்பு செய்யப்படும் என பொதுப் பணித் துறையினர் தெரிவித்தனர். விழாவில், பாலக்கோடு எம்.எல்.ஏ. கே.பி.அன்பழகன், கோட்டாட்சியர் வி.ஷகிலா, வட்டாட்சியர் பொன்.தமிழ்ச்செல்வி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் எம்.முனுசாமி, சி.தென்னரசு, லலிதா குப்புசாமி, பொதுப் பணித் துறை உதவிச் செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## <u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 7,800 கன

அடியாக அதிகரித்தது. காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால் மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனப் பகுதிக்கு தண்ணீர் திறந்துவிடுவது கடந்த வியாழக்கிழமை நிறுத்தப்பட்டது. இந்த நிலையில், தற்போது, காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், சனிக்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 6,714 கன அடியாக இருந்தது, ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 7,882 கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை 102.72 அடியாக உயர்ந்தது. அணையின் நீர் இருப்பு 68.41 டி.எம்.சி.யாக இருந்தது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேளாண் பணியில் மகளிர் பங்கு முக்கியமானது**

வேளாண் பணிகளில் விதைப்பிலிருந்து அறுவடை வரை மகளிரின் பங்கு முக்கியமானது என்றார் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ராஜாமணி. திண்டிவனம் உழவர் பயிற்சி நிலையத்தில் செஞ்சி, மரக்காணம், மேல்மலையனூர், ஒலக்கூர், வானூர், மயிலம் வட்டாரங்களைச் சார்ந்த அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களுக்கு சிறப்பு பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. முகாமிற்கு விழுப்புரம் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ராஜாமணி தலைமை வகித்தார். உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் முன்னிலை வகித்தார். அம்மா பண்ணை மகளிர் குழுக்களிடம் வேளாண் இணை இயக்குநர் ராஜாமணி கருத்து

தெரிவிக்கையில், விவசாயப் பணிகளில் விதைப்பிலிருந்து அறுவடை வரை பெண்களின் பங்கு முக்கியமானது. பெண்கள் குழுக்களாக இணைந்து அந்தந்தப் பகுதிகளுக்கு தேவைப்படும் தரமான விதைகள், அங்கக உரங்கள் தயாரிப்பு, சிறு தானியங்கள் உற்பத்தி, பால் கொள்முதல், கால்நடைகள் வளர்ப்பு, பண்ணை இயந்திரங்கள் வாடகைக்கு விடுதல் போன்ற பணிகளில் சிறப்பாக செயல்பட்டு அந்தந்த பகுதிகளில் விவசாய உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப பரவலாக்கத்தை அதிகரித்திட முடியுமென்ற நோக்கில் அம்மா பண்ணை மகளிர் குழுக்கள் தொடங்கப்பட்டு தற்சமயம் செயல்பாட்டில் உள்ளன. அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் தொழில்நுட்பம் நிர்வாகத் திறன்களை வளர்த்திடும் நோக்கில் இப்பயிற்சி விழுப்புரம் மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. இப் பயிற்சிகளில் கலந்து கொள்ளும் பண்ணை மகளிர்கள் தங்கள் திறன்களை வளர்த்துக் கொண்டு சமுதாயத்துக்கும், விவசாய உற்பத்திக்கும் உறுதுணையாக இருந்திட வேண்டும்.சிறப்பாக செயல்படும் மகளிர் குழுக்களுக்கு தொழில் முனைந்திட ஏதுவாக வங்கிக் கடன்கள், சுழல்நிதி, அரசு மானியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார். முகாம் ஏற்பாடுகளை உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் வேதவல்லி செய்திருந்தார்.

## விவசாயிகளின் நலனுக்காக 48,613 ஆழ்துளைக் கிணறுகள்

கர்நாடகத்தில் சிறு, ஏழை விவசாயிகளின் நலனுக்காக 48,613 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படும் என்று, மாநில சமூக நலத் துறை அமைச்சர் ஆஞ்சநேயா தெரிவித்தார். இதுகுறித்து பெங்களூருவில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

2014-15-ஆம் நிதியாண்டில் கங்கா கல்யாணாத் திட்டத்தின் கீழ், சிறு, ஏழை விவசாயிகளின் நலனுக்காக மாநிலம் முழுவதும் 48,613 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க திட்டமிட்டிருக்கிறோம். இதில் டாக்டர் அம்பேத்கர்

மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் 28,666 கிணறுகளும், தேவராஜ் அர்ஸ் பிற்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் சார்பில் 5,995 கிணறுகளும், கர்நாடக வால்மீகி மேலவை சார்பில் 13,952 ஆழ்துளைக் கிணறுகளும் அமைக்கப்படும். இதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி உடனடியாக தொடங்குகிறது. டிசம்பர் மாதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் முடிந்து, அடுத்தாண்டு மார்ச் இறுதிக்குள் 48,613 ஆழ்துளைக் கிணறுகள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். சிறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்துவதற்கு அவரவர் நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து தரப்படுகிறது. ஒரு ஆழ்துளைக் கிணறு தோண்டுவதற்கு ரூ.2 லட்சம் செலவிடப்படும். ஆழ்துளைக் கிணறு தோண்டப்பட்ட 3 மாதங்களில் மின் வசதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

## மஞ்சளுக்கு கூடுதல் விலை



திருச்செங்கோடு: திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 1,700 மூட்டை மஞ்சள் ரூ.65 லட்சத்திற்கு நேற்று முன்தினம் விற்பனையானது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நேற்று முன்தினம் மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், ஆத்தூர், கெங்கவல்லி உள்பட பல்வேறு பகுதிகளிலிருந்து மஞ்சள் விற்பனைக்கு வந்தது. மஞ்சளை கொள்முதல் செய்ய ஏராளமான வியாபாரிகள் வந்திருந்தனர். டெண்டர் மூலம் ஸி65 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.5,499 முதல் 7,500 வரை விற்பனையானது. கிழங்கு ரகம்

ரூ.4,863 முதல் ரூ.6,490 வரை விலைபோனது. பனங்காளி ரகத்திற்கு ரூ.6,300 முதல் 7,669 வரை விலை கிடைத்தது. மஞ்சள் வரத்து ஈரோடு மார்க்கெட்டை விட அதிகளவில் இருந்தது. குவிண்டாலுக்கு 600 அதிகம் கிடைத்தது.

## நாமக்கல்லில் பனங்கிழங்குகள் விற்பனை தொடங்கியது

நாமக்கல், : பனை மரங்கள் தென் மாவட்டங்களில் அதிக அளவில் உள்ளன. போதிய மழை இல்லாமல் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதால் பனை மரங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனால் தட்டுப்பாடு காரணமாக பனை மரங்களில் இருந்து கிடைக்கும் பொருட்களின் விலை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. கோடை காலத்தில் கிடைக்கும் பதநீர், நுங்கு ஆகியவை பொது மக்களுக்கு நீர் சத்துக்களை தருகின்றன. பனம் பழம் மூலம் விளைவிக்கப்படும் சுவை மிக்க பனம் கிழங்கு குளிர் காலத்தில் கிடைக்கிறது. தற்பொழுது, பனங்கிழங்கின் வரத்து நாமக்கல்லில் தொடங்கியுள்ளது. சேந்தமங்கலம் அருகே உள்ள திருமலைப் பட்டி பகுதியில் இருந்து விளைவிக்கப்படும் பனங்கிழங்கை வியாபாரிகள் மொத்தமாக வாங்கி வந்து, விற்பனையை தொடங்கியுள்ளனர். கடந்த ஆண்டு 10 பனங்கிழங்குகள் கொண்ட ஒரு கட்டின் விலை ரூ20-க்கு விற்கப்பட்டது. இந்த ஆண்டு, 7 பனங்கிழங்குகள் கொண்ட ஒரு கட்டின் விலை ரூ20-க்கு விற்கப்படுகிறது. எனினும், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தில் பனங்கிழங்கின் விளைச்சல் அதிகரிக்கும் என்பதால், அதன் விலை குறையும் என பனங்கிழங்கு விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

## கரும்பு விளைச்சல் அதிகரிக்க பயிர் சுழற்சி முறையில் 40 ஏக்கரில் நெல் சாகுபடி விவசாயி புது முயற்சி

பள்ளிபாளையம், : பள்ளிபாளையம் கொக்கராயன்பேட்டை விவசாயிகள், கரும்பு சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். காவிரி ஆற்றின்

கரையோரங்களில் இந்த வயல் பரப்புகள் இருப்பதாலும், நீரேற்று பாசனம் மூலம் போதிய தண்ணீரை பெற்று விவசாயம் செய்வதாலும், கரும்பு சாகுபடியில் இந்த விவசாயிகள் கவனம் செலுத்துவது வழக்கம். ஒரு முறை கரும்பு பயிரிட்டால் ஆண்டுக்கொரு முறை வீதம் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் கரும்பு அறுவடை செய்யமுடியும். விளைந்த கரும்புகளை அருகில் உள்ள சர்க்கரை ஆலைக்கு விற்றுவிடலாம். இதனிடையே, தொடர்ந்து கரும்பு சாகுபடி செய்வதால் அதன் மகசூல் குறைந்து வருகிறது. சராசரியாக ஏக்கருக்கு 60 டன் வரை விளைந்த கரும்பில், தொடர் மகசூல் காரணமாக 35 டன்னாக குறைந்துள்ளது. இதையடுத்து அப்பகுதி விவசாயிகள் பலரும் பயிர் சுழற்சி முறையில், மாற்று பயிர் சாகுபடியில் தீவிரம் காட்ட துவங்கியுள்ளனர். பட்லூரை சேர்ந்த விவசாயி கிருஷ்ணமூர்த்தி, இந்த ஆண்டு கரும்பு சாகுபடியை நிறுத்தி விட்டு, 40 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஒரு ஏக்கர் பரப்பளவில் நெல்நாற்று விட்டுள்ள அவர், சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் வயல்களை சீர்படுத்தி உழவு கருவிகளுடன், தீவிர நெல் சாகுபடியில் இறங்கியுள்ளார். தனக்கு போக மீதமுள்ள நாற்றுகளை தேவைப்படும் விவசாயிகளுக்கு கொடுத்துவிடப்போவதாக தெரிவித்துள்ள இவர், ஏக்கருக்கு 50 மூட்டை நெல் மகசூல் கிடைக்கும் வகையில் திட்டமிட்டுள்ளதாக கூறினார். பயிர்சுழற்சி முறையில் நெல் சாகுபடியை தேர்ந்தெடுத்துள்ள கிருஷ்ணமூர்த்திக்கு தேவையான வேளாண்மை தொழில்நுட்ப உதவிகளை பள்ளிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் அசோக், வேளா ண்மை அலுவலர்கள் செல்வம், குமார் ஆகியோர் செய்து வருகின்றனர்.

**<u>தொடர்மழை எதிரொலி பண்ணை குட்டைகளில் துள்ளி விளையாடும் மீன்கள் கூடுதல் வருமானம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

பள்ளிபாளையம், : தொடர்மழையால் பள்ளிபாளையம் பகுதிகளில் பண்ணை குட்டைகள், கிணறுகள் நிரம்பி வழிகின்றன. குட்டைகளில் மீன்கள் துள்ளுவதால் கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் பகுதியில் உள்ள கொக்கராயன்பேட்டை, பாப்பம்பாளையம் பகுதிகளில் வேளாண்மைத்துறை மூலம் நான்கு இடங்களில் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. விளைநிலத்தில் தாழ்வான பகுதியில் அமைக்கப்பட்ட இந்த பண்ணை குட்டைகளில் விளைநிலங்களில் பெய்யும் மழைநீர் சேகரமாகி, அருகில் உள்ள விவசாய கிணறுகளின் ஊற்றாக மாறும்படி குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குட்டையில் உள்ள தண்ணீரில் விவசாயிகள் ரோகு, கட்லா போன்ற மீன்குஞ்சுகள் விட்டு வளர்த்து வருகின்றனர். தவிடு, புண்ணாக்கு, கோழி கழிவுகள் போன்றவற்றை உணவாக கொண்ட இந்த மீன்குஞ்சுகள் நன்கு வளர்ந்துள்ளன. தொடர் மழையால், பண்ணை குட்டைக்கு தேவையான நீர்வரத்து உள்ளதால் மீன்கள் துள்ளி குதிக்கின்றன. பாப்பம்பாளையம் கோம்பு தோட்டம் பெரியசாமி பண்ணை குட்டையில் இரண்டு கிலோ எடைகள் கொண்ட மீன்கள் துள்ளுகின்றன. ஆயிரம் மீன் குஞ்சுகளை 300 ரூபாய்க்கு வாங்கி வந்து வளர்த்த இவரது குட்டையில், தற்போது சுமார் அரை டன் மீன்கள் நீந்துகின்றன. ஒரு கிலோ மீன்கள் வெளி மார்க்கெட்டில் 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எனவே, 6 மாதத்தில் 50 ஆயிரம் ரூபாய்க்கு மீன்கள் மூலம் துணை வருமானம் கிடைத்ததாக அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இவரைப் போலவே இப்பகுதியில் பண்ணை குட்டை அமைத்த மூன்று விவசாயிகளும் அதிக லாபம் ஈட்டவுள்ளனர். தொடர்ந்து மீன் வளர்ப்பில் ஆர்வம் காட்டினால் நல்ல வருமானம் பெற முடியுமென

நம்புவதாக கொக்கராயன்பேட்டை மீன் விவசாயி சண்முகம் தெரிவித்தார்.

**முல்லைப்பெரியாறு உபரி நீரை வைகை அணையில் தேக்க நடவடிக்கை**

மதுரை, : முல்லைப் பெரியாறு அணை 142 அடியை எட்டுவதால் உபரி நீரை வைகை அணை மற்றும் காய்ந்து கிடக்கும் கண்மாய்களில் நிரப்ப பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். வடகிழக்கு பருவமழை நீடிப்பதால், முல்லைப்பெரியாறு அணை 141 அடியை தொட்டு, எந்த நேரமும் 142 அடியை எட்டும் நிலையில் உள்ளது. அதற்கு மேல் வரும் உபரி நீரை கேரளாவிற்கு செல்லவிடாமல், வைகை அணையில் கூடுதலாக தேக்க பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். பெரியாறு அணையில் தற்போது வினாடிக்கு 456 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. 1,855 கன அடி வரை தண்ணீர் திறக்கலாம். அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயரும்போது, உபரிநீர் வைகை அணைக்கு திறந்துவிடப்படும். 71 அடி உயரமுள்ள வைகை அணையில் நேற்றைய நிலவரப்படி 50.23 அடி நீர்மட்டம் உள்ளது. உபரிநீர் வரும்போது வைகை அணை விரைவில் நிரம்ப வாய்ப்புள்ளது. இந்நிலையில், வைகையில் நேற்று முதல் தண்ணீர் திறக்கும் அளவு 1,860 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், வைகை அணையில் தண்ணீர் அதிகரிக்கும்போது, மதுரை மாவட்டத்தில் காய்ந்து கிடக்கும் பெரிய கண்மாய்களில் நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக வறண்டு கிடக்கும் கண்மாய்களில் முல்லைப்பெரியாறின் உபரிநீரை தேக்குவதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். புதுச்சேரி, : புதுவை வேளாண் துறை இயக்குனர் ராமமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:

## யூரியா தட்டுப்பாட்டினை போக்க 2ஆயிரம் மெட்ரிக் டன் இறக்குமதி வேளாண் இயக்குனர் தகவல்

ஒவ்வொரு மாதமும் மத்திய அரசின் ரசாயனம் மற்றும் உர அமைச்சகத்தின் மூலம் புதுவை மாநிலத்திற்கு தேவையான பல்வேறு வகையான உரங்களை ஒதுக்கீடு செய்கிறது. அந்த ஒதுக்கீட்டின் அடிப்படையில் நமது மாநிலத்திற்கு தேவையான உரங்களை உர உற்பத்தியாளர்கள், உர இறக்குமதியாளர்கள் நமது மாநிலத்தில் உள்ள கூட்டுறவு, தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்து வருகின்றனர். இந்நிலையில், மத்திய அரசு நாப்தா மூலம் உற்பத்தி செய் யும் யூரியாவை தவிர்த்து இயற்கை எரிவாயு வாயி லாக யூரியாவை உற்பத்தி செய்ய அறிவுறுத்தியது. யூரியா உற்பத்தி செலவை குறைக்கும் நோக்கத்தில் மத்திய அரசின் இந்த திட்டத்தின் வழிகாட்டுதலை யூரியா நிறுவனங் கள் பின்பற்றாததால் அதற் கான மானியத்தை மத்திய அரசு நிறுத்தி விட்டது. இதன் விளைவாக தமிழகத் தில் அமைந்துள்ள யூரியா உற்பத்தி செய்யும் ஸ்பிக், எம்எப்எல் நிறுவனங்கள், தங்கள் யூரியா உற்பத்தியை நிறுத்தி விட்டன. இதனால் புதுவை மாநிலத்தில் யூரியா தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனை கருத்தில் கொண்டு, புதுவை மாநில வேளாண் துறை, மத்திய அரசை அணுகி மாற்று இறக்குமதியாளர் கள் மூலம் யூரியாவை பெற முயற்சிகள் மேற்கொண் டது. இதை தொடர்ந்து, ஐபிஎல், கொரமண்டல் கம்பெனிகள் மூலம் யூரியாவை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்பேரில், இந்த நவம்பர் மாதத்தில் 2 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியாவை மேற்கூறிய நிறுவனங்கள் தர விருப்பம் தெரிவித்து தற்சமயம் 100 மெட்ரிக் டன் யூரியா புதுவைக்கு தருவிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டு உள்ளது. வரும் வாரத்தில் மீதமுள்ள யூரியா உரத்தை தருவித்து விவசாயிகளுக்கு விநியோகிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இவ்வாறு கூறியுள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## மாடுகளுக்கு மடிவீக்க நோய் அபாயம்

காஞ்சிபுரம்: கறவை மாடுகளுக்கு, மழைக்கால மடிவீக்க நோய் ஏற்படும் அபாயம் உள்ள தால், சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருக்க விவசாயிகளை கால்நடை துறை அறிவுறுத்தியுள்ளது. பருவநிலை மாற்றம் காரணமாக, கோமாரி நோய் தாக்கி, ஏராளமான கறவை மாடுகள் இறந்தன. இதன் காரணமாகவே, ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை கோமாரி தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. அதன்படி, கடந்த செப்டம்பர் மாதம் காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் உள்ள நான்கு லட்சம் கறவை மாடுகளுக்கு, கோமாரி தடுப்பூசி போடப்பட்டதாக, கால்நடை துறை அறிவித்தது. அவ்வாறு மாவட்டத்தில் உள்ள அனைத்து கறவை மாடுகளுக்கும், கோமாரி தடுப்பூசி போடப்பட்டாலும், மழைக்காலம் துவங்கியுள்ள இந்த சமயத்தில், மடிவீக்க நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக கால்நடை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால், மாட்டுக் கொட்டகை மற்றும் சுற்றுப்புறத்தை சுகாதாரமாக வைத்திருக்க கால்நடை துறை அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து, காஞ்சிபுரம் கால்நடை உதவி இயக்குனர் ராஜன்சி ஆன்டணி கூறுகையில், "வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருவதால், மாடு களுக்கு மடிவீக்க நோய் வருவதை தவிர்க்க, கால்நடைகளின் காம்பு, மடி ஆகியவற்றை அடிக்கடி, சுத்தம் செய்து, முறையாக பராமரிக்க வேண்டும். பால் கறக்கப்பட்டவுடன், மாடுகளின் காம்புகளின் துளைகள் பெரிதாக இருக்கும். அவ்வாறு உள்ளபோது, நோய் ஏற்படுத்தும் கிருமிகள், மாட்டின் உடலுக்குள் நுழைய வாய்ப்புள்ளது. மாட்டுக்கொட்ட கையில் சாணம், தண்ணீர் சேராமலும்,

கிருமிநாசிகளை தெளித்தும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு கறவை மாடுகளுக்கு மடி வீங்கி இருந்தாலோ, பால் கறக்கும்போது, பால், தயிர் போன்று வந்தாலோ, உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகவும்," என்றார்.

## அபாயம்! : பயிர்களில் இலை மடக்கு புழு, கூண்டு புழு தாக்கும்... : பாதிப்பை தவிர்க்க வேளாண் துறை ஆலோசனை

சோழவரம்: மழையின் காரணமாக, நெற்பயிர்களில், குருத்து பூச்சி, இலை மடக்கு புழு மற்றும் கூண்டு புழு ஆகியவற்றின் தாக்குதலால் உண்டாகும் பாதிப்பை தவிர்க்க, விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை வழங்கி உள்ளது. சோழவரம் ஒன்றியம், அருமந்தை, ஒரக்காடு, ஆரணி, சின்னம்பேடு, ஆகிய இடங்களில், 16 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், சம்பா பருவத்திற்காக நெல் பயிரிடப்பட்டு உள்ளது. சில தினங்களாக, மேற்கண்ட பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது. தொடர் மழையின் காரணமாக, இளம் பயிர்களில் கூண்டு புழு, வளர்ந்த பயிர்களில் இலை மடக்கு புழு, குருத்து புழு ஆகியவற்றின் தாக்குதல் ஏற்படும் அபாயம் உள்ளது.தாக்குதலில் இருந்து பயிர்களை பாதுகாக்க, விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வேளாண் துறை ஆலோசனை வழங்கி உள்ளது. தாக்குதலை சமாளிக்க... * வயல்களில் களை செடிகளை அகற்ற வேண்டும். * விளக்குபொறி அமைத் தல் (மாலை, 6:00 மணி முதல், இரவு, 11:00 மணி வரை) வேண்டும். இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தழைச்சத்தின் தேவையை அறிந்து இடவேண்டும். * 2.47 ஏக்கருக்கு, 'டிரைக்கோகிரம்மா தைலோனிஸ்' என்ற முட்டை ஒட்டுண்ணி, 5 சிசி இடவேண்டும். பயிர்களை பாதுகாக்க...

வளர்ச்சி பருவத்தில், 10 சதவீதம் தாக்கப்பட்ட இலைகள், பூக்கும் தருவாயில், 5 சதவீதம் கண்ணாடி இலைகள் சேதம் இருந்தால், ஒரு ஏக்கருக்கு, 'குளோர்பைரிபாஸ்-' 500 மி.லி, 'புரபனோபாஸ்' 400 மி.லி,

'டைகுளோர்வாஸ்-' 250 மி.லி, 'கார்டாப் ஹைட்ரோ குளோரைடு' - 6 கி., 'புளூபென்டிமைடு' - 20 மி.லி., என்ற அளவில் ஏதேனும் ஒரு மருத்தினை தெளித்து கட்டுப்படுத்தலாம். பயிர்கள் தற்போது துார்கட்டும், அதிக துார்கட்டும், பஞ்சு கட்டும் தருணத்தில் உள்ளது. வடிகால் வசதி இல்லாத விளை நிலங்களில், மழை நீரால் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும். அதை தவிர்க்க...

மழைநீர் சூழந்துள்ள விளை நிலங்களில், உடனடியாக வடிகால் ஏற்படுத்தி, நீரினை வடித்து, வேர்ப்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்க செய்ய வேண்டும். இளம்பயிரில் பாதிப்பு ஏற்பட்ட இடத்தில், நாற்றாங்காலில் மீதமிருக்கும் நாற்றை கொண்டு, நடவு செய்யலாம். நீரில் மூழ்கிய பயிரில் ஊட்டச்சத்து பற்றாக்குறை இருக்க வாய்ப்பு உள்ளதால், ஒரு ஏக்கருக்கு, 22 கி., யூரியா, 18 கி., ஜிப்சம், 4 கி., வேப்பம் புண்ணாக்கு என்ற அளவில், இடவேண்டும்.

குலைநோய், இலைகரு கல் நோயை கட்டுப்படுத்த, ஒரு

## பண்ணை மகளிர் குழு துவக்க விழா

அவலூர்பேட்டை: சித்தேரியில் பண்ணை மகளிர் குழு துவக்க விழா நடந்தது. மேல்மலையனூர் ஒன்றியம் சித்தேரியில் வேளாண் துறை சார்பில் அம்மா பண்ணை மகளிர் குழு துவக்க விழா நடந்தது. பண்ணை மகளிர் குழு தலைவர் உமா தலைமை தாங்கினார். வேளாண்உதவி இயக்குனர் பெரியசாமி வரவேற்றார்.வேளாண் இணை இயக்குனர் ராஜாமணி குழுவை துவக்கி வைத்து பேசினார். வேளாண் துணை இயக்குனர் மாவட்ட நீர் வடிப்பகுதி மேம்பாட்டு முகமை ராஜேந்திரன், உதவி இயக்குனர் ராமசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.விரிவாக்க அலுவலர் தமிழ்மணி நன்றி கூறினார்.

## <u>உழவு மாடுகளுக்கு லாடம் கட்டும் பணிகளில் விவசாயிகள் தீவிரம்</u>

கச்சிராயபாளையம்: கச்சிராயபாளையம் பகுதியில் உழவு மாடுகளுக்கு லாடம் கட்டும் பணிகளில் விவசாயிகள் முனைப்பு காட்டி வருகின்றனர். கச்சிராயபாளையம் சுற்று வட்ட பகுதிகளில் விவசாயம் அதிகளவில் நடக்கிறது. கோமுகி அணையில் தண்ணீர் திறந்ததை தொடர்ந்து விவசாயிகள் சம்பா சாகுபடி பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக விவசாய நிலங்களை தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளவதுடன் உழவு மாடுகளுக்கு கால்களில் லாடம் பொருத்தும் பணிகளிலும் அதிக அக்கறையுடன் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மாடுகள் உழவு பணிகளின் போது சிரமின்றி நடப்பதற்கு உதவுதால் ஒரு ஜோடி உழவு மாட்டிற்கு ரூ. 500 செலவு செய்து விவசாயிகள் லாடம் அமைக்கின்றனர்.

## <u>பூச் செடி விற்பனை ஜோர்</u>

மூங்கில்துறைப்பட்டு: மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் விற்ற பூ மற்றும் மரச் செடிகளை மக்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வமாக வாங்கிச் சென்றனர். மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் பெய்த மழையால் பூமி ஈரப்பதமாக காணப்படுகிறது. கள்ளக் குறிச்சி, சங்கராபுரம் பகுதிகளில் இருந்து டாடா ஏஸ் வாகனம் மூலம் பூச்செடிகளை ஏற்றி வந்து விற்கின்றனர். பூச்செடி குறைந்த விலையில் விற்பதால் பள்ளி மாணவர்கள், குடியிருப்பு மக்கள் மற்றும் வணிகர்கள் பூச்செடிகளை ஆர்வமாக வாங்கிச் செல்கின்றனர். ரோஜா, குண்டு மல்லி, முல்லை, ஜாதி மல்லி, ஜின்னியா, வண்ணசாமந்தி, கனகாம்பரம், இட்லிபூ போன்ற செடி வகைகளையும், நெல்லிக்காய், எலுமிச்சை, சப்போட்டா, தென்னை போன்ற மரவகை செடிகளையும் மக்கள் உற்சாகமாக வாங்கிச் செல்கின்றனர்.

## ஏரி முழுவதும் அசோலா: விவசாயிகள் மகிழ்ச்சி

கச்சிராயபாளையம்: கச்சிராயபாளையம் ஏரி முழுவதும் விவசாயிகளுக்கு அதிகளவில் பயன்படும் அசோலா தாவரம் வளர்ந்துள்ளது. வெங்கட்டாம்பேட்டை சாலையில் கச்சிராயபாளையம் ஏரியில் அசோலா தாவரம் அதிகளவில் வளர்ந்துள்ளது. இது தண்ணீரில் மிதக்கும் தன்மை கொண்ட பெரணி வகை சிறு தாவரம். இதனை மூக்குத்தி மற்றும் கம்மல் செடி எனவும் கூறுகின்றனர். இது விவசாயிகளுக்கு பல வகைகளில் பயன்படுகிறது. அசோலா கால்நடை மற்றும் கோழிகளுக்கு மிகவும் ஏற்ற தீவனமாக உள்ளது. இதில் 25 முதல் 30 சதவீதம் புரதச்சத்து உள்ளதால் கால்நடைகளுக்கு அமினோ அமிலங்கள், தாது உப்புக்கள், விட்டமின்கள் மற்றும் பீட்டாகரோட்டின் சத்துக்கள் அதிகளவில் உள் ளன. அசோலா குறைந்த செலவுள்ள தீவனமாக கால்நடை வளர்ப்பில் பயன்படுகிறது. இதனை பச்சையாகவும், உலர் தீவனமாகவும் கால்நடைகளுக்கு வழங்கலாம். நெல் சாகுபடி செய்த வயலில் அசோலாவை தூவினால் நல்ல தழைச்சத்தாகவும், இயற்கை உரமாவும் செயல்பட்டு மண்ணின் தரத்தை மேம்படுத்துவதோடு விளைச்சலும் அதிகரிக்கிறது. பல பயன்களை கொண்ட அசோலா தாவரங்களை பல இடங்களில் விவசாயிகள் செயற்கை முறையில் தொட்டி அமைத்து வளர்க்கும் நிலையில் கச்சிராயபாளையம் ஏரியில் இயற்கையாக வளர்ந்துள்ளது விவசாயிகளிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ரூ. 65 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

திருச்செங்கோடு : திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், மஞ்சள் ஏலம் நடந்தது.திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, எள், ஆமணக்கு உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள்

விற்பனை செய்யப்படுகிறது. நேற்று நடந்த மஞ்சல் ஏலத்தில், விரலி ரகம், குவிண்டாலுக்கு, அதிகபட்சமாக, 7,500, குறைந்தபட்சமாக, 5,499 ரூபாய், கிழங்கு மஞ்சள், அதிகபட்சமாக, 6,490, குறைந்தபட்சமாக, 4,863 ரூபாய்க்கு ஏலம் போனது. பனங்காலி ரகம், அதிக பட்சமாக, 7,699, குறைந்தபட்சமாக, 6,300 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தமாக, ஒரே நாளில், 1,700 குவிண்டால் மஞ்சள் விற்பனை ஆனதில், 65 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**தொடர் மழையின் காரணமாக அணைகளில் நீர்வரத்து அதிகரிப்பு**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பெய்து வரும் தொடர் மழை காரணமாக, அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், வடகிழக்கு பருவமழை துவக்கத்தில் இருந்தே பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் மற்றும் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிக்க துவங்கியது. நீர் வரத்து அதிகரிப்பால், கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. தொடர் மழை காரணமாக, ஈச்சம்பாடி அணைக்கட்டு முழு கொள்ளளவான, 17.35 அடியை எட்டியது. மேலும், 65.27 அடி உயரம் கொண்ட வாணியாறு அணையில், 15ம் தேதி நிலவரப்படி தண்ணீர் அளவு, 34.77 அடியை எட்டியுள்ளது. 50 அடி உயரம் கொண்ட சின்னாறு அணையில், 43.39 அடியும், 50.18 அடி உயரம் கொண்ட தொப்பையாறு அணையில் தண்ணீர் அளவு, 15.6 அடியும் உள்ளது. 24.60 அடி உயரம் கொண்ட நாகவதி அணையில் தண்ணீர் அளவு, 4.92 அடியும், 25.20 அடி உயரம் கொண்ட கேசர்குளி அணையில் தண்ணீர் அளவு, 23.95 அடி, 34.45 அடி உயரம் கொண்ட வரட்டாறு அணையில் தண்ணீர் அளவு, 18.70 அடியாகவும் உள்ளது. 14.76 அடி உயரம் கொண்ட தும்பலஹள்ளி அணைக்கு, போதிய நீர்வரத்து இல்லாததால், அணை வறண்டு

காணப்படுகிறது. ஈச்சம்பாடி அணை முழு கொள்ளளவான, 17.35 அடியை எட்டியதை அடுத்து, முதல்வர் பன்னீர்செல்வத்தின் உத்தரவின் பேரில், கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடந்த விழாவில், அமைச்சர் பழனியப்பன், அணைக்கட்டில் இருந்து நேற்று பாசனத்திற்கு தண்ணீரை திறந்து விட்டார். இந்த அணை நீரின் மூலம் இடது, வலது புற கால்வாய் மூலம் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள, 6,250 ஏக்கர் பாசன வசதி பெறும். இந்நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ., அன்பழகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கறவை பசுக்கள் வாங்க ரூ.3 கோடி கடன்

திருவள்ளூர்: திருவள்ளூரில், 184 குடும்பங்களுக்கு, விலையில்லா கறவை பசுக்கள் வழங்குவதற்காக, 3 கோடி ரூபாய் கடன் உதவிகள் வழங்கப்பட்டன.திருவள்ளூர் அடுத்த, காக்களூர் பால்
குளிரூட்டும் நிலையத்தில், கனரா வங்கி சார்பில், கறவை பசுக்கள் வழங்குவதற்காக, 184 குடும்பங்களுக்கு, 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கடனுதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.காஞ்சி, திருவள்ளூர் மாவட்ட ஆவின் சங்க தலைவர் சந்திரன், கடன் உதவிகளை வழங்கி பேசினார். நிகழ்ச்சியில், ஆவின் பொது மேலாளர் நடராஜன், கனரா வங்கி துணை பொது மேலாளர் சுப்ரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## எள் விளைச்சல் அதிகரிப்பு

லாலாபேட்டை: கிருஷ்ணராயபுரம், தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில், மானாவரியாக சாகுபடி செய்யப்பட்டுள்ள எண்ணை வித்து பயிரான எள் பயிரில், விளைச்சல் அதிகரித்துள்ளது. கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளான முத்துரெங்கம்பட்டி, சித்தலவாய், பழைய ஜெயங்கொண்டம், கருப்பத்தூர், ஆகிய பஞ்சாயத்து கிராமப்புற பகுதியில் மானாவரியாக தெளிக்கப்பட்ட எண்ணெய் வித்து பயிரான எள்

சாகுபடி, ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் செய்யப்பட்டது. வடகிழக்கு பருவமழை காரணமாக, சாகுபடி செய்யப்பட்ட எள் செடிகள் நல்ல முறையில் வளர்ந்து, காய் பிடித்துள்ளது. இதன்மூலம், எண்ணெய் வித்து பயிரான எள்ளில் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தற்போது மீண்டும் மழை அவ்வப்போது பெய்து வருவதால், செடிகளில் உள்ள காய்கள் நல்ல நிலையில் வளர வாய்ப்பு உள்ளது. ஒரு ஏக்கருக்கு, இரண்டு அல்லது மூன்று மூட்டை எள் கிடைக்கும். இதன் மூலம் விவசாயிகளுக்கு, 40 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும், என தெரிவிக் கின்றனர்.மேலும், மதுபுரம், கொசூர், மத்தகிரி, பஞ்சப்பட்டி, கொண்டமங்கிணம், சிவாயம் ஆகிய பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட எள் பயிர், பச்சை, சிவப்பு பூச்சி தாக்குதலால் எதிர்பார்த்த அளவு வளரவில்லை. இதனால், இந்த பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**<u>மழைநீர் தேங்கிய நெல் வயல்களில் மகசூல் பாதிப்பை தடுக்க யோசனை</u>**

கரூர்: வடகிழக்கு பருவ மழையால், நெற்பயிர் சாகுபடி செய்துள்ள வயல்களிலும், தாழ்வான பகுதியில் பயிர் சாகுபடி செய்துள்ள வயல்களிலும், தண்ணீர் தேங்கி மகசூல் குறைய வாய்ப்புள்ளது. இந்த பாதிப்பில் இருந்து, பயிர்களை பாதுகாத்து நல்ல மகசூல் எடுக்க, மாவட்ட நிர்வாகமும், வேளாண்மை துறையும் யோசனை தெரிவித்துள்ளது: மழைநீர் சூழ்ந்துள்ள வயல்களில், உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி, நீரை வடித்து வேர்ப்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்ய வேண்டும். சமீபத்தில் நடவு செய்யப்பட்ட இளம் பயிர்கள், சில இடங்களில் கரைந்து போயிருக்க வாய்ப்புள்ளது. அந்த இடங்களில், புதிய நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். தூர் வெடித்த பயிர்களில், பயிர்களை கலைத்து, போக்கிடங்களில் நடவு செய்து பயிர் எண்ணிக்கையை பராமரிக்க

வேண்டும். நடவுப்பயிர் முழுவதுமாக அழுகியிருக்கும் பட்சத்தில், குறுகிய கால நெற்பயிர் ரகங்களை, நேரடியாக ஈடு விதைப்பு செய்ய வேண்டும். நீரில் மூழ்கிய பயிரில், ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட வாய்ப்புள்ளது.

இதை நிவர்த்தி செய்ய, ஏக்கருக்கு, 22 கிலோ யூரியா, ஜிப்சம், 18 கிலோ இவற்றுடன், 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து, ஒரு இரவு முழுவதும் வைத்து, தண்ணீர் வடிந்தவுடன் வயலில் இடவும். போதிய சூரிய வெளிச்சம் தென்பட்டவுடன் ஏக்கருக்கு, 2 கிலோ யூரியாவுடன், ஒரு கிலோ சிங்க் சல்பேட் உரங்களை, 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து, கைத்தெளிப்பான் மூலம் இலைவழி உரமாக தெளிக்க வேண்டும். மழைநீர் பாதித்த இளம் பயிரில் கூண்டுப்புழுவும், வளர்ந்த பயிரில் இலை சுருட்டுப்புழு தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. கூண்டுப்புழுவைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட வயலின், இரு வரப்புகளிலும் நின்று கொண்டு, நீண்ட கயிறை பயிரின் மேல்பகுதியில் நன்றாக படும்படி இழுக்க வேண்டும். ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை, மூன்று கிலோ மணலுடன் கலந்து, வயலில் சீராக தூவ வேண்டும். பிறகு மானோகுரோட்டோபாஸ் மருந்தை ஏக்கருக்கு, 400 மி.லி., என்ற அளவில், 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இலை சுருட்டுப்புழுவின் தாக்குதல், 10 சதவீதத்துக்கு அதிகமாக தென்பட்டால் அதைக் கட்டுப்படுத்த, புரோபோரானோபாஸ் என்ற மருந்தை ஏக்கருக்கு, 400 மி.லி., என்ற அளவில், 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். பாக்டீரியல் இலைக்கருகல் நோயின் அறிகுறி தென்பட்டால், ஸ்டெப்ரோமைசின் சல்பேட், டெட்ராசைக்ளின், 120 கிராமம் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு, 500 கிராம் ஆகியவற்றை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம், 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும். நோய் அறிகுறி தென்பட்டால் தழைச்சத்து

உரமிடுவதை தவிர்க்க வேண்டும். விவசாயிகள் மேற்கூறிய வழிமுறைகளை கையாண்டு, மழை நீர் பாதிப்பிலிருந்து நெற்பயிரை பாதுகாத்து, அதிக மகசூல் எடுத்து கூடுதல் வருமானம் பெற வேண்டும், என்று அறிவுறுத்தியுள்ளனர்.

## **<u>நெல் பயிர்களை தாக்கும் இலை சுருட்டு புழுக்கள்</u>**

நத்தம் : நெல் பயிர்களை தாக்கும் இலை சுருட்டு புழுக்களை ஆரம்பத்திலேயே அழிப்பதற்கான முயற்சிகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டுமென வேளாண்மை துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.நத்தம் பகுதியில் முளையூர், புன்னப்பட்டி, வேலம்பட்டி, செந்துறை, செல்லப்பநாயக்கன்பட்டி, குடகிப்பட்டியில் 60 ஏக்கர் பரப்பளவில் இறவை சாகுபடியாக நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. சாரல் மழை நிலவுவதால் நாற்றுகளில் இலை சுருட்டு புழுக்கள் தொற்றிக்கொண்டு பயிர்களை அழித்து வருகின்றன. இதனால் மகசூல் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.வேளாண்மை உதவி இயக்குனர் ரவிபாரதி கூறுகையில், ""விளைநிலங்களில் தேங்கியுள்ள தண்ணீரை முதலில் வெளியேற்ற வேண்டும். பின்னர் இரண்டு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி., மோனோகுரோட்டோபாஸ் மருந்தினை கலந்து கைத்தெளிப்பானால் நெல் பயிரில் தெளிக்க வேண்டும். இதன் மூலம் இலை சுருட்டு புழுக்களை அழிக்கலாம்,''என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>முல்லைப்பெரியாறு அணையில் 142 அடி தண்ணீரை தேக்க கேரளா முழு ஒத்துழைப்பு தர வேண்டும்: உம்மன் சாண்டிக்கு தமிழக முதல்-அமைச்சர் கடிதம்</u>**



சென்னை, முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த கடந்த மே மாதம் 7-ந் தேதி சுப்ரீம் கோர்ட்டு அனுமதிஅளித்தது.

கேரளாஎதிர்ப்பு

தற்போது வடகிழக்கு பருவமழை காலம் என்பதால், நீர்வரத்து அதிகரித்து முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. நீர்மட்டம் 141 அடியை தாண்டியுள்ள நிலையில், எந்த நேரமும் நீர்மட்டம் 142 அடியை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே நீர்மட்டம் அதிகரிப்பதை தடுக்கும் வகையில், அணையில் இருந்து தமிழகம் அதிக அளவு தண்ணீரை எடுத்துக் கொள்ளுமாறு கோரி முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு கேரள முதல்-மந்திரி உம்மன் சாண்டி கடந்த 14-ந் தேதி ஒரு கடிதம் எழுதினார். அத்துடன் அணையின் நீர்மட்டத்தை 136 அடியாக குறைக்க கோரி, சுப்ரீம் கோர்ட்டில் கேரள அரசு நேற்று முன்தினம் ஒரு மனு தாக்கல் செய்தது. ஓ.பன்னீர்செல்வம் கடிதம்

இந்த நிலையில், உம்மன் சாண்டியின் கடிதத்துக்கு பதில் அளித்து முதல்-

அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அந்த கடிதத்தில் அவர் கூறி இருப்பதாவது:- முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது குறித்து, கடந்த 14-ந் தேதி தாங்கள் எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்றது. முல்லைப்பெரியாறு அணை, தமிழக அரசுக்கு சொந்தமானது என்பதையும், தமிழக அரசால் பராமரிக்கப்பட்டு இயக்கப்படுகிறது என்பதையும் தாங்கள் அறிவீர்கள். கடந்த மே மாதம் 7-ந் தேதியிட்ட சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பில் இது, தெளிவாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சுப்ரீம்கோர்ட்டுஅனுமதி

தமிழகத்தின் மனுவுக்கு ஆதரவாக தீர்ப்பு அளித்த சுப்ரீம் கோர்ட்டு, முல்லைப்பெரியாறு அணையில், கடந்த 1979-ம் ஆண்டு, நீர்மட்டம் தற்காலிகமாக 136 அடிக்கு குறைக்கப்பட்டதை, தொடக்க கட்டமாக 142 அடி வரை உயர்த்திக்கொள்ள தமிழக அரசுக்கு அனுமதி அளித்து உள்ளது. அதே சமயம், அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதிலும், அணையின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதிலும் தமிழகத்திற்கு கேரளா இடையூறு செய்யக்கூடாது என்றும், சுப்ரீம் கோர்ட்டு, கடந்த 2006-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ந் தேதி தீர்ப்பு அளித்துள்ளது. தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள், பெரியாறு அணை மற்றும் வைகை அணை நீரையே நம்பியுள்ளனர் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

விவசாயிகள்சிரமம்

1979-ம் ஆண்டுக்கு முன்னர், இந்த இரு அணைகளின் ஒட்டுமொத்த நீர் கொள்ளளவு 16.31 டி.எம்.சி. அடியாக இருந்தது. கேரள அரசின் ஒப்புதலோடு, மத்திய நீர்வள ஆணையம் தெரிவித்த யோசனைப்படி, அணையை வலுப்படுத்த தமிழக அரசுக்கு வசதி செய்யும் வகையில், ஒட்டுமொத்த கொள்ளளவு 11.85 டி.எம்.சி. அடியாக குறைக்கப்பட்டது.

சுப்ரீம் கோர்ட்டு கடந்த 2006-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 27-ந் தேதியும், பின்னர், கடந்த மே மாதம் 7-ந் தேதியும் பிறப்பித்த உத்தரவுகளின்படி, அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்த்தப்பட்டபோது, கொள்ளளவு 13.41 டி.எம்.சி. அடியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. 1979-ம் ஆண்டு முதல் முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் குறைக்கப்பட்டதால், தமிழ்நாடு அரசு சுமார் 26.23 டி.எம்.சி. அடி தண்ணீரை பயன்படுத்த முடியாமல் போய்விட்டது. இதனால், தமிழகத்தின் 5 மாவட்ட விவசாயிகளுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டது. வைகை அணை, பெரும்பாலும், வடகிழக்கு பருவமழையையே நம்பி உள்ளது. எனவே, வைகை பாசனப் பகுதி நீர் தேவைகளை சமாளிக்க வைகை நீர்ப்பிடிப்பு தண்ணீரை மட்டுமின்றி, முல்லைப்பெரியாறு அணையில் இருந்து திருப்பிவிடப்படும் தண்ணீரையும் தமிழகம் பயன்படுத்த வேண்டி உள்ளது. நில அதிர்வுகளை தாங்கும் தன்மை பருவமழை மற்றும் நீர்த்தேவை ஆகியவற்றின் அடிப்படையில், கிடைக்கும் தண்ணீரை அதிகபட்சமாக பயன்படுத்திக்கொள்ளும் வகையில், முல்லைப்பெரியாறு அணை நிர்வகிக்கப்பட்டு வருகிறது. எனவே, முல்லைப்பெரியாறு அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு குறித்து, கேரள அரசு தலையிட முடியாது. கடந்த ஜூன் மாதம் முதல் முல்லைப்பெரியாறு அணையில் நீர்மட்டம் திடீரென்று உயரவில்லை. படிப்படியாகவே அதிகரித்து உள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், கனமழை பெய்யவில்லை. கடந்த அக்டோபர் மாதம் 31-ந் தேதி கேரள அரசு எழுதிய கடிதத்திற்கு, தமிழக அரசு நவம்பர் 1-ந் தேதி எழுதிய பதிலில், முல்லைப்பெரியாறு அணை கட்டுமான ரீதியிலும், நீர் கொள்ளளவு அடிப்படையிலும், நில அதிர்வுகளை தாங்கும் தன்மை என்னும் அடிப்படையிலும் பாதுகாப்பானதாக உள்ளது. ஆதலால், 142 அடி தண்ணீரை தேக்கி வைக்க முடியும் என்றும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டு

உள்ளது.

முழுஒத்துழைப்பு

136 அடி அளவுக்குள் தண்ணீரை தேக்கி வைக்கவேண்டும் என கேரளா கூறுவது, கடந்த மே மாதம் 7-ந் தேதி சுப்ரீம் கோர்ட்டு அளித்ததீர்ப்புக்கு எதிரானது. சுப்ரீம் கோர்ட்டு நியமித்த மேற்பார்வை குழு கூட்டம் இம்மாதம் 3-ந் தேதி நடைபெற்ற போது, மதகுகளை திறப்பதற்கு சட்ட ரீதியிலான உடனடி தேவையில்லை என்று அதில் முடிவு எடுக்கப்பட்டது. கடந்த 12-ந் தேதி அன்று கேரளா சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துகளை தமிழக அரசு நன்கு பரிசீலித்த பின், அதுகுறித்து 15-ந் தேதி சுப்ரீம் கோர்ட்டு மேற்பார்வை குழுவிற்கு விரிவான அறிக்கை அனுப்பப்பட்டதோடு, கேரள அரசுக்கும் அதன் நகல் அனுப்பப்பட்டது எனவே, சுப்ரீம் கோர்ட்டு அரசியல் சாசன அமர்வின் உத்தரவுப்படி, முல்லைப்பெரியாறு அணையில் 142 அடி உயரத்துக்கு தண்ணீர் தேக்கி வைக்க முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறி உள்ளார்.

## <u>தென் தமிழகத்தில் நாளை மழை பெய்ய வாய்ப்பு வானிலை ஆய்வு மையம் தகவல்</u>




தென் தமிழகத்தில் நாளை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். இது தொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது:–

அந்தமானுக்கும், இலங்கைக்கும் இடையே வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை வலுவிழந்தாலும், அங்கு காற்றின் வேகம் அதிகமாக இருக்கிறது. இதனால் தமிழ்நாட்டில், தென்தமிழகத்தில் அநேக

இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில்(இன்று) மழை பெய்யக்கூடும். சென்னையை பொறுத்தவரையில் வானம் மேகம் மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், நீலகிரி மாவட்டம் குன்னூரில் 4 செ.மீட்டர் மழையும், தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு, தஞ்சை மாவட்டம் வல்லத்தில் தலா 3 செ.மீட்டர் மழையும், நெல்லை மாவட்டம் ஆயக்குடியில் 2 செ.மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது.

**<u>நீண்ட வரிசையில் நின்று விவசாயிகள் உரம் வாங்கினர்</u>**



அரியலூர் மாவட்டம் முழு வதும் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் நெல், கரும்பு, வாழை மற்றும் மானாவரி பயிர்கள் நடப்பட்டு விவசாய பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகி றது. வயல்களுக்கு போடுவ தற்கான கலப்பு உரங்கள், யூரியா போன்றவை கிடைப் பது தற்போது தட்டுப்பாடாக உள்ளது.வெளி மார்க்கெட்டில் யூரியா கிடைக் கவில்லை. அப்படி கிடைத் தாலும் விலை அதிகமாக உள்ளது. கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கி மூலம் யூரியா குறைந்த விலை க்கு விவசாயிகளுக்கு வழங்கப் படுகிறது. அரியலூர் பஸ் நிலையத்தில் உள்ள கோவிந்த புரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி உர விற்பனை நிலையத்தில் நேற்று விவசாயிகளுக்கு யூரியா விற்கப்படும் என்று அறிவிக்கப் பட்டு இருந்தது. இதையொட்டி நேற்று காலை 7 மணியில் இருந்து கொட்டும் மழையில் விவசாயிகள் தங்கள் நிலத்திற் கான பட்டா புத்தகங்களுடன் சுமார் 500க்கும் மேற்பட்டோர் நீண்ட வரிசையில் கடை திறப்பதற்கு முன்பே காத்திருந் தனர். நேரமாக, நேரமாக கூட் டம்

அதிகரித்ததால் போலீசார் விரைந்து வந்து விவசாயிகளை ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு ஊர் வாரியாக யூரியா வாங்கி செல்ல ஏற்பாடு செய்தனர். விவசாயிகளுக்கு ஒரு ஏக்க ருக்கு ஒரு மூட்டை யூரியா வழங்கப்பட்டது. அதை பெற் றுக்கொண்டவர்கள் ஏக்கரு க்கு 3 மூட்டைக்கு குறையாமல் தேவைப்படும். ஆனால் எங்க ளுக்கு ஒரு மூட்டைதான் வழங்கப்படுகிறது. யூரியா அதிகம் வழங்க அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

<u>**பெருந்துறை பகுதியில் 5,750 ஏக்கரில் நிலக்கடலை பயிர் சாகுபடி**</u>



பெருந்துறை, பெருந்துறை ஒன்றியத்துக்கு உள்பட்ட பகுதியில் 5 ஆயிரத்து 750 ஏக்கரில் நிலக்கடலை பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

<u>நிலக்கடலைசாகுபடி</u>

பெருந்துறை ஒன்றியத்துக்கு உள்பட்ட சீனாபுரம், சுள்ளிப்பாளையம், துடுப்பதி, பட்டக்காரன்பாளையம், கராண்டிபாளையம், மேட்டுப்புதூர், மூங்கில்பாளையம், குள்ளம்பாளையம், விஜயபுரி, பெரிய வீரசங்கிலி, சின்ன வீரசங்கிலி, பாப்பம்பாளையம், போலநாயக்கன்பாளையம், திங்களூர், வெட்டயன்கிணறு, தோரணவாவி, மடத்துப்பாளையம், கல்லாகுளம், கருக்குபாளையம், நிச்சாம்பாளையம் ஆகிய பகுதிகளில் 5 ஆயிரத்து 750 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் பெருந்துறை ஒன்றியத்துக்கு உள்பட்ட இந்த பகுதியை சேர்ந்தவர்கள் நிலக்கடலை பயிரிட்டுநஷ்டத்தைஅடைந்துவந்தனர். <u>பருவமழை</u> இந்த நிலையில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு பெய்த பருவ மழை காரணமாக இந்த பகுதியை

சேர்ந்தவர்கள் பயிரிட்டு உள்ள நிலக்கடலை பயிர் நன்றாக வளர்ந்து பசுமையாக காட்சி அளிக்கிறது. இதுகுறித்து அந்த பகுதியை சேர்ந்த விவசாயி கூறுகையில், 'ஒரு ஏக்கரில் நிலக்கடலை பயிர் சாகுபடி செய்ய ரூ.10 ஆயிரம் செலவு ஆகும். ஒரு ஏக்கருக்கு 750 கிலோ வரை நிலக்கடலை கிடைக்கும். தற்போது உள்ள விலைப்படி ஒரு ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் வரை கிடைக்க வாய்ப்பு உண்டு. எனவே நிலக்கடலைக்கான இதே விலை நீடித்தால் ரூ.25 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும்,' என்றார்.

**<u>வரத்து குறைவினால் வாழைத்தார் விலை திடீர் உயர்வு</u>**



கரூர் மாவட்டம், நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, என்.புகழூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்களை உள்ளூர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும், வியா பாரிகளுக்கும் விற்பனை செய் கின்றனர். சில வியாபாரிகள் வாழைத் தோட்டத்தை குத்த கைக்கு எடுத்துக்கொள்கின் றனர். வாழை தோட்டத்தில் விளையும் வாழைத்தார்களை விவசாயி களிடமிருந்து வியாபாரிகள் வாங்கி லாரிகள் மூலம் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும், பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார் ரூ.150-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.200-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.150-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.200-க்கும், மொந்தன் வாழைத்தார் ரூ.400-க்கும் வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். நேற்று பூவன் வழைத்தார் ரூ.250-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.250-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.200-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.300-க்கும், மொந்தன்

வாழைத்தார் ரூ.700-க்கும் வியாபாரிகள் வாங்கி சென்றனர். தொடர் மழையின் காரணமாக, வரத்து குறைவினால் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. வாழைத் தார் விலை உயர்ந் துள்ளதால் வாழை பயிரிட் டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**முகூர்த்த நாட்களில் விற்பனை அதிகம் ஜோரான ஜோதிகா மாலை**



வடகிழக்கு பருவமழை பெய்துள்ளதால் மல்லிகை பூவிற்கு பெயர்போன மதுரையில் பூக்களின் வரத்து அதிகரித்துள்ளது. வாடிப்பட்டி, நிலக்கோட்டை, திருமங்கலம், வடபழஞ்சி, தேனி உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து மல்லிகை, செவ்வந்தி, முல்லை, ரோஜா ஆகிய பூக்கள் மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டிற்கு அதிகம் வருகின்றன. இங்கிருந்துதான் சில்லரை மற்றும் மொத்த வியாபாரிகள் வாங்கிச் சென்று மதுரையின் மற்ற பகுதிகளில் பூ கட்டியும், உதிரியுமாகவும் விற்கின்றனர். தற்போது முகூர்த்த நாட்கள் அதிகம் இருப்பதால் பூக்களின் விற்பனையை விட கல்யாணம் மற்றும் விஷேச மாலைகளின் விற்பனை சூடுபிடித்துள்ளது. இதில் ஜோதிகா ரக மாலை கடந்த மூன்று ஆண்டுகளாக ஜோராக விற்பனையாகி வருகிறது என்று மாட்டுத்தாவணி மொத்தப் பூக்கடை வியாபாரி இதழ் மாலை கண்ணன்தெரிவித்தார்.

ஜோதிகாமாலை

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த மாலை திரைப்பட நடிகை ஜோதிகாவின் திருமணத்தில் பயன்படுத்தி அது பிரபலமடைந்ததால் இதற்கு ஜோதிகா மாலை என்ற பெயர் வந்தது. இதற்கு இதழ் மாலை என்ற மற்றொரு பெயரும் உண்டு. முதலில் மும்பையில்தான் இந்த மாலை அறிமுகமானது. தமிழகத்தில் கோவையில் அறிமுகம் செய்யப்பட்டது.

தற்போது அனைத்து மாவட்டங்களிலும் விற்கப்படுகிறது. திருமணம், நிச்சயதார்த்தம், வரவேற்பு, சடங்கு, சீர் வரிசை, காதுகுத்து என அனைத்துவித விசேஷ\'83களுக்கும் இந்த மாலையைத்தான் அதிகம் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். இந்த மாலையை தொடுப்பது கடினம். ஒரு மாலை கட்டுவதற்கு குறைந்தபட்சம் 4 மணி நேரம் ஆகும். இது பெங்களூர் ரோஜாக்களால் தொடுக்கப்படுகிறது. ஒரு பூவை எடுத்து அதனை உதிர்த்து அதில் இருக்கும் மிகப்பெரிய இதழ்கள், சிறிய இதழ்கள் என்று தரம் பிரித்து அதனை ஒவ்வொன்றாக லாவகமாகவும், அழகாகவும் ஒன்றுபோல் தொடுக்கின்றோம். இதனை எல்லோராலும் கட்டுதல் என்பது இயலாத காரியம். பூ தொடுப்பதில் பல ஆண்டுகள் அனுபவம் இருந்தால் மட்டுமே முடியும். இதழ் மாலையில் ஸ்பெசல், சாதா என நிறைய டிசைன்கள் உள்ளன. வாடிக்கையாளர்களின் விருப்பப்படி கட்டிக் கொடுக்கின்றோம். திருமணத்திற்கு மணமக்கள் அணியும் ஆடைகளுக்கு ஏற்ற வண்ணங்களில் மாலைகள் தயார் செய்து தருகின்றோம். இதில் மற்றொரு அம்சம் இதை எங்கு வேண்டுமானாலும் எளிதாக எடுத்துச் செல்லலாம். நல்ல முகூர்த்த தினங்களில் ஒரு வாரத்திற்கு முன்பாகவே ஆர்டர் கொடுத்தால் மட்டும்தான் எங்களால் மாலை கட்டிக் கொடுக்க முடியும். அணிபவர்களின் கழுத்திற்கு வலி இருக்காது, சுமை தெரியாது. ஆதலால் நீண்ட நேரம் அணிந்து கொள்ளலாம். சாதா மாலைபோன்று உதிராது. குறைந்தபட்சம் 3 நாட்கள் தாக்குப் பிடிக்கும். திருமணத்திற்கு எனும்போது கல்யாண மாலை, பூச்செண்டு, மாற்று மாலை என அனைத்து செட்களும் உட்பட சாதா மாடல் விலை ரூ.6000 முதல் ரூ.8000 வரை, இதுவே ஸ்பெசல் மாடல் என்றால் ரூ.8,000 முதல் ரூ.10,000 வரை விற்பனை செய்கின்றோம். தற்போது பூக்களின் விலை குறைந்த போதிலும் இவற்றின் விலை குறைய வாய்ப்பில்லை. ஏனெனில் பெங்களூர் ரோஜாவை நேரடியாக கொள்முதல்

செய்வதில்லை ஏஜெண்டுகளிடம் இருந்துதான் வாங்குகின்றோம். இதில் இருக்கும் வேலைப்பாடுகளும் அதிகம். ஆகையால் இவற்றின் விலையில் மாற்றம் மிகக் குறைவாகத்தான் இருக்கும். பார்ப்பதற்கு பிளாஸ்டிக் மாலை போன்று நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் அழகாக கட்டிக் கொண்டிருக்கும்போதே கழுத்தில் அணிய வேண்டும் என்ற ஆசை பார்க்கும் அனைவருக்கும் பிறக்கும் என்றார், இதழ் மாலை கண்ணன்.

**<u>ராமநாதபுரம் மாவட்ட மக்களுக்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட நடவடிக்கை அமைச்சர் சுந்தர்ராஜன் தகவல்</u>**

ராமநாதபுரம் மாவட்ட மக்களுக்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டுள்ளதாக அமைச்சர் சுந்தர்ராஜன் தெரிவித்தார். தூர்வாரும் பணி பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட உய்யவந்த அம்மன் கோவில் தெப்பக்குளத்தை தூர்வாரும் பணி தொடங்கி யது. நகரசபை தலைவர் கீர்த் திகா முனியசாமி தலைமை தாங்கினார். அமைச்சர் சுந்தர் ராஜன் தூர்வாரும் பணியை தொடங்கி வைத்தார். ஆணை யாளர் கண்ணன் முன்னிலை வகித்தார். பொறியாளர் தங் கப்பாண்டியன் வரவேற்று பேசினார். பின்னர் ஜே.சி.பி. எந்திரம் மூலம் காட்டு கரு வேல மரங்களை அப்புறப்ப டுத்தும் பணி தொடங்கியது. அதனை அமைச்சர் சுந்தர்ரா ஜன் பார்வையிட்டு அதிகாரி களுக்கும், பணியாளர்களுக் கும் ஆலோசனைகளை வழங் கினார். அப்போது அவர் கூறியதா வது:– தமிழக அரசின் ஆலோ சனைப்படி அனைத்து நக ராட்சி, பேரூராட்சி பகுதிக ளில் உள்ள காட்டுக் கருவேல மரங்களை அப்புறப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. விவசாய நிலங்களை பாது காப்பதற்காக இந்த நடவ டிக்கை மேற்கொள்ளப்படுகி றது. பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட இப்பகுதியில் சுகம் அறக்கட்டளை இயக்குனர் பிரபாகரன் தலைமையில் காட்டு கருவேல மரங்களை அப்புறப்படுத்தும் பணி நடை பெறுகிறது. ஏற்கனவே ராம நாதபுரம்

நகராட்சி பகுதியில் பணிகள் நடைபெற்று முடிந் துள்ளன. வைகை தண்ணீர் தமிழ்நாட்டில் மக்கள் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. மக்கள் நலனே தன் நலம் என அரசு செயல் பட்டு வருகிறது. முல்லைப்பெரி யாறு அணை பிரச்சினையில் ஜெயலலிதா மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக 136 அடியில் இருந்து 142 அடி யாக நீதிமன்ற உத்தரவின் படி நீர்மட்டம் உயர்த்தப்பட் டுள்ளது. 35 ஆண்டுகளுக்கு பிறகு முல்லை பெரியாறு அணையில் நீர்மட்டம் தற் போது உயர்ந்துள்ளது குறிப்பி டத்தக்கது. கடந்த ஆட்சியில் முல்லை பெரியாறு அணை பிரச்சினை உள்பட எந்த பிரச்சினைக்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வைகை அணையில் இருந்து முதல் கட்டமாக கள் ளம்பரி பகுதிக்கு 1200 கன அடி தண்ணீர் திறந்துவிடப் பட்டுள்ளது. 2ம் கட்டமாக சிவகங்கை மாவட்டத்துக்கும், 3வது கட்டமாக ராமநாதபு ரம் மாவட்டத்துக்கும் வைகை அணையில் இருந்து தண் ணீர் திறந்து விட உத்தரவிடப்பட் டுள்ளது. அதன்படி 1244 கன அடி தண்ணீரை ராமநாதபு ரம் மாவட்டத்துக்கு பெற மாவட்ட நிர்வாகம் மற்றும் பொதுப்பணித் துறை அதிகா ரிகள் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர். இம்மாவட் டத்துக்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவது உறுதி. காட்டு கரு வேல மரங்களை அப்புறப் படுத்துவதன் மூலம் நீர் ஆதா ரங்களை பேணிக்காக்கவேண்டும்.

விளையாட்டுவிடுதி

மக்கள் சிக்கனமான முறை யில் தண்ணீரை பயன் படுத்தி பாதுகாத்துக் கொள்ள வேண் டும். ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்காக பல திட் டங்களை ஜெயலலிதா செயல் படுத்தி உள்ளார். அனைத்து கண்மாய்களும் தூர்வாரப் பட்டு தண்ணீரை தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. பரமக்குடியில் 60 பேர் தங்கி படிக்கும் வகை யில் விளையாட்டு விடுதி கட் டப்பட உள்ளது. ரூ.1 கோடி செலவில் விளையாட்டு மைதா னம் அமைக்கப்பட உள்ளது. 10 கடற்கரை மாவட்டங்களை உள்ளடக்கிய பீச்

வாலிபால் உள்ளிட்ட பல்வேறு போட்டி கள் ராமநாதபுரத்தில் நடத்தப் பட உள்ளது. ஊரணி, கண் மாய் பகுதிகளை கிராம மக் கள் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். பரமக்குடியை அடுத்துள்ள எமனேசுவரத்தில் ரூ.5½ கோடி யிலும், காட்டுப்பரமக்குடியில் ரூ.7 கோடியிலும் தரைப்பாலம் அமைக்கப்பட உள்ளது. மழை நீரை தேக்கி வைத்து விவசா யத்துக்கு பயன்படுத்தும் வகையில் 4 இடங்களில் தடுப் பணை கட்டப்பட்டுள்ளது. கிருதுமால், பரளை ஆறுகள் தூர்வாரப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் நகரசபை துணை தலைவர் ஜெய்சங்கர், நகர் செயலாளர் கணேசன், கூட்டு றவு வீட்டுவசதி சங்க தலைவர் உதுமான் அலி, எம்.ஜி.ஆர். மன்ற துணை செயலாளர் திசைநாதன், நகரசபை கவுன் சிலர்கள் கனகராஜ், ரகீமாபீவி, விஜயபாபு, மாவட்ட கவுன்சி லர் ரஜினிகாந்த், நயினார்கோ வில் ஒன்றிய இளைஞரணி செயலாளர் சிவக்குமார், பாசறை செயலாளர் வினோத் குமார், நல்லுக்குறிச்சி நாகரா ஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர். சுகாதார அதி காரி சீனிவாசன் நன்றி கூறி னார்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்வு



நெல்லை, நெல்லை மாவட்டத்தில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை நீடிப்பதால் பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்து உள்ளது.

மழைநீடிப்பு

நெல்லை மாவட்டத்தில் கடந்த மாதம் 2 வாரம் தொடர்ந்து மழை நீடித்து இருந்தது. அதன் பின்னர் சில நாட்களில் மழை வெறித்தது. இந்த நிலையில்

கடந்த 3 நாட்களாக மாவட்டம் முழுவதும் மிதமானது முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. நெல்லையில் நேற்று முன்தினம் காலையில் இருந்து இரவு வரை விட்டு விட்டு மழை பெய்தது. நேற்று காலையில் சாரல் மழை பெய்தது. இதேபோல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. கடையநல்லூர், செங்கோட்டை, கடையம், பனவடலிசத்திரம், வீரவநல்லூர், மானூர் போன்ற பகுதிகளில் சாரல் மழையும், ஒரு சில இடங்களில் சிறிது நேரம் பலத்த மழையும் பெய்தது. குற்றாலம் தென்காசி, குற்றாலத்தில் காலையில் சாரல் மழை இருந்தது. மதியம் சிறிது நேரம் பலத்த மழை பெய்தது. குற்றாலம் மெயின் அருவியில் நேற்று முன்தினம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டனர். இரவு முதல் காலை வரையில் மழை இல்லாததால் அருவியில் வெள்ளப்பெருக்கு குறைந்தது. இதனால் நேற்று காலையில் அருவியில் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். அனைத்து அருவிகளிலும் மிதமான தண்ணீர் விழுகிறது.

பாபநாசம் அணை

விக்கிரமசிங்கபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. மேற்கு தொடர்ச்சி மலை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த 3 நாட்களாக மிதமான மழை நீடிக்கிறது. இதன் காரணமாக மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. கடந்த மாதம் பெய்த வடகிழக்கு பருவ மழை காரணமாக பாபநாசம் அணையின் நீர்மட்டம் 60 அடியில் இருந்து 100 அடியை தாண்டியது. அணை நீர்மட்டம் 110 அடியை தொட்ட நிலையில் பாசனத்துக்காக திறந்து விடப்பட்டது. தற்போது மீண்டும் மழை பெய்வதால் கடந்த 3 நாட்களில் சுமார் 5 அடி வரையில் பாபநாசம் அணையின் நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. நேற்று முன்தினம் 112.60 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 7 மணி

நிலவரப்படி 115.45 அடியாக உயர்ந்துள்ளது. நீர்ப்பிடிப்பு மற்றும் நீர்வரத்து பகுதிகளில் மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரிக்கும். அணையின் மொத்த கொள்ளளவு 143 அடியாகும். அணைக்கு நேற்றைய நிலவரப்படி வினாடிக்கு 2820.90 கன அடி நீர் வந்து கொண்டு இருக்கிறது. ஒரு சில நேரங்களில் 3 ஆயிரம் கனஅடி வரை தண்ணீர் வருகிறது. மழை காரணமாக அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்படுவது படிப்படியாக குறைக்கப்பட்டு 300 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணைப்பகுதியில் அதிக பட்சமாக 43 மில்லி மீட்டரும், கீழ் அணையில் 29 மில்லி மீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

மணிமுத்தாறு

மற்றொரு அணையான 156 அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 4 அடி உயர்ந்து உள்ளது. அதாவது நேற்று முன்தினம் 124.21 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று 128.31 அடியாக அதிகரித்து உள்ளது. இங்கு 24 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. 118 கொள்ளளவு கொண்ட மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 80.40 அடியில் இருந்து 81.20 அடியாக உயர்ந்து உள்ளது. அணைக்கு 666 கன அடி நீர் வந்து கொண்டு இருக்கிறது. இங்கு 6.2 மில்லி மீட்டரும், அம்பாசமுத்திரத்தில் 6 மில்லி மீட்டரும், சேரன்மாதேவியில் 6.2 மில்லி மீட்டரும், கல்லிடைக்குறிச்சியில் 9 மில்லி மீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

நிரம்பி வரும் குளங்கள்

களக்காடு வனப்பகுதியில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக பச்சையாறு அணை மற்றும் அடிவாரப்பகுதியில் உள்ள 40 குளங்கள் நிரம்பி வருகின்றன. நாங்குநேரியன்கால்வாய், வடமலையான் கால்வாய், பச்சையாறு ஆகிவற்றில் அதிக அளவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

தலையணையில் பகுதியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப் படவில்லை. இதேபோல் நாங்குநேரியில் பெய்த பலத்த மழையின் காரணமாக குளம் நிரம்பும் நிலையில் உள்ளது. பணகுடி, இட்டமொழி, ஏர்வாடி பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்று காலையில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

## <u>உழவர்பாதுகாப்பு திட்டத்தில் 4,196 பயனாளிகளுக்கு ரூ.2 கோடி நலத்திட்ட உதவி அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி வழங்கினார்</u>

திருவண்ணாமலையில் நடந்த விழாவில் உழ வர் பாதுகாப்பு திட்டத் தில் ரூ.2 கோடி மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி வழங்கினார். ரூ.2கோடி நலத்திட்ட உதவி திருவண்ணாமலை வேங்கிக் காலில் உழவர்பாதுகாப்பு திட்டத்தின்கீழ் கல்விஉதவித் தொகை, இயற்கை மரண உதவித்தொகை, விபத்து நிவாரண உதவி என பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. கலெக்டர் அ.ஞானசேகரன் தலைமை தாங்கினார். விழாவில் வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு 4,196 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 18 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:- மக்களின் முதல் வர் ஜெயலலிதாவின் வழி காட்டுதலின்படி அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகி றது. அனைத்து தரப்பு மக்க ளையும் மனதில் கொண்டு அவர்களின் தேவைகளை உணர்ந்து அதற்கேற்ப திட் டங்களை அறிமுகப்படுத்தி யவர் ஜெயலலிதா. தாயுள்ளம் கொண்டு திரு வண்ணாமலை மாவட்ட மக் களின் அனைத்து கேரிக்கைக ளையும் நிறைவேற்றி வருகிறார். கலசபாக்கம் தனிதாலுகாவை உருவாக்கி கொடுத்தார். வேளாண்மை கல்லூரி மற் றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வழங்கி இருக்கிறார். உயர்த்தி கொள்ள வேண்டும் நெடுஞ்சாலைத்துறை சார் பில் ரூ.100 கோடி ஒதுக்கப் பட்டு சாலைக்

சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வரு கிறது. முல்லைபெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தி விவசாயிகளின் வாழ் வில் விளக்கேற்றினார். உழவர் பாதுகாப்பு திட்டத்தையும் அவர்தான் கொண்டுவந்தார். இந்த திட்டத்தில் பயன் அடைய உறுப்பினரின் வயது 18 முதல் 65 வரை வரையறுக் கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் இன்று (நேற்று) 4,196 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 18 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள் ளன. விவசாயிகள் இந்த திட் டத்தில் அனைத்து உதவிக ளையும்பெற்று தங்கள் வாழ் வாதாரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக செய்திமக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப் பட கண்காட்சியை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி பார்வையிட்டார். விழாவில் எம்.எல்.ஏ.க்கள் ஏ.கே.அரங்கநாதன். டி.சுரேஷ் குமார், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் எம்.எஸ். நைனாக்கண்ணு, நகராட்சி தலைவர் என்.பாலச்சந்தர், தனித்துணை ஆட்சியர் ஜோதி, உதவி கலெக்டர் உமா மகேஸ்வரி, கற்பகம் மொத்த விற்பனை பண்டகசாலை தலைவர் வி.பவன் குமார், ஒன் றியக்குழு தலைவர்கள் எம்.கணேசன், மீனாக் குமாரி புரு ஷோத்தமன், அமுதா குமார சாமி, வணிக வரி ஆலோச னைக்குழு உறுப் பினர் டி.சுந் தரமூர்த்தி, கூட்டு றவு பண் டகசாலை இயக்குனர்கள் கே.ராஜன், இ.என். நாராய ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## <u>திண்டிவனம் பகுதியில் தொடர் மழையால் நிரம்பி வரும் ஏரிகள்</u>



திண்டிவனம், திண்டிவனம் பகுதியில் தொடர் மழையின் காரணமாக ஏரி களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் ஏரிகள் நிரம்ப தொடங்கியுள்ளன.

நீர்வரத்துஅதிகரிப்பு

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையானது கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு தொடங்கி பெய்து வருகின்றது. இதனால் பெரும்பாலான மாவட்டங் களில் உள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் ஆகியவை முழுமையாக நிரம்பி உள்ளது. ஆனால் விழுப்புரம் மாவட் டத்தில் பருவமழையானது போதிய அளவு பெய்யாத காரணத்தால் அணைகள், ஏரிகள்,குளங்களில் குறைந்த அளவில் மட்டுமே தண்ணீர் தேங்கியிருந்தது. குறிப்பாக திண்டிவனம் பகுதியில் உள்ள ஏராளமான ஏரி, குளங்களில் மிகக்குறைந்த அளவிற்கே மழை நீர் தேங்கி நின்றது. இந்த நிலையில் திண்டிவனம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் கடந்த 4 நாட்களாக பலத்த மழை பெய்தது. இதன் காரண மாக திண்டிவனம் கிடங்கல் ஏரி, தாதாபுரம் பெரிய ஏரி, ஓமிப்பேர் ஏரி, நல்லாளம் ஏரி உள்பட பல்வேறு கிராமங் களில் அமைந்துள்ள ஏரிகளில் மழை நீர் வரத்து அதிகரித் துள்ளது. இதனால் ஏரிகளின் நீர் இருப்பானது கிடுகிடுவென உயர்ந்து வருகின்றது. இதன் காரணமாக அந்தந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:- விவசாயிகள் மகிழ்ச்சி

திண்டிவனம் பகுதியில் பரவலாக மழை பெய்தாலும், மழை நீர் வடிகால் வாய்க் காலை பொது பணித்துறை யினர் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக தூர்வாராத காரணத்தால், திண்டிவனம் பகுதியில் உள்ள பல ஏரிகளுக்கு மழை நீர் சரியான முறையில் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மழை நீர் வடிகால் தூர்வாரப்படாத காரணத்தால், மழைநீரானது ஏரிக்குள் செல்ல முடியாமல், அவை சாலையோரங்கள் மற்றும் குடியிருப்புகளை சுற்றி தேங்கி யாருக்கும் பயனின்றி வீணாகி வருகின்றது. இருந்த போதும் கடந்த 4 நாட்களாக பெய்த கனமழையின் காரணமாக ஏரிகள் நிரம்ப

தொடங்கியுள்ளது. இதனால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம் என்றார்.